அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 2/97 (iv)

எனது இல:1/543சு01/35
அரசாங்க,நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.
1997-11-28 ஆந் தேதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்.
திணைக்களத் தலைவர்களுக்கும்!

**1998 வரவு செலவு திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**
**அரசதுறையின் சம்பள மீளமைப்பு**

1997.01.15 ஆந் தேதிய 2/97 ஆம் இலக்க. 1997.04.30 ஆந் தேதிய 2/97(1) ஆம் இலக்க 1997.08.28 ஆந் தேதிய 2/97(11) ஆம் இலக்க 1997.11.12 ஆந் தேதிய 2/97(111) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பால் உங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. மேற்படி சுற்றறிக்கைகளின் கீழ் ரூபா 90,000/- அல்லது அதற்கு மேற்பட்ட புதிய திரட்டிய ஆண்டுச்சம்பளம் விதிக்கப்பட்டிருக்கும் பதவிகளைவகிக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல.2/97 இன் 2:2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள சம்பள அதிகரிப்பின் இரண்டாம் கட்டமான அதிகரிப்பின் 60% கொடுப்பனவை 1998.07.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. மொத்த அதிகரிப்பின் கீழ் மீளமைக்கப்பட்ட புதிய சம்பள அளவுத் திட்டமொன்றின் தொடக்க ஆண்டுச் சம்பளப் படிநிலை 90,000/- ரூபா அல்லது அதற்கு மேற்பட்டதாக அமையும் பதவிக்ள் தொடர்பில் மட்டும் இது ஏற்படையனவாகும். உதாரணமாக 2/97 (111) இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சம்பளத் தொகுதி ர்ீ-3-5 (ரூபா 72,240-15x2460-1,09,140)விதிக்கப்பட்டடுள்ள ஒரு பதவி தொடர்பில் சம்பள அதிகரிப்பின் 60% 1998.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துடன் சம்பளத் தொகுதி ரீ.3-7-2 (ரூபா 90,360-14x2460-1,24,800) விதிக்கப்பட்டுள்ள ஒரு பதவி தொடர்பில் சம்பள அதிகரிப்பின் 60 % 1998.01.01 ஆந் திகதி தொடக்கம் அல்லாமல் 1998.07.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும்.

03. மேலே முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக 1997.01.01 ஆந் திகதி அல்லது அதற்கு பிற்பட்ட ஒரு திகதியிலிருந்து நடைமுறைப்படும்வண்ணம் அமைச்சரவையினால் அல்லது தாபனப் பணிப்பாளரினால் விதிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்கள் தொடர்பாகவும் இவ் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

04. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சு

lvara/1